# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 வைகாசி 27 வியாழக்கிழமை (10-06-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 168


# சிங்கள வீரவிதான இயக்கத்துக்கு எதிரான நாளைய ஆர்ப்பாட்டப் பேரணிக்கு

# பல கட்சிகள், அமைப்புகள் ஆதரவு

## பாடசாலைகளை பகிஷ்கரிக்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

சிங்கள வீரவிதான இயக்கத்துக்கு எதிராக நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் இ. தொ. காவினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டப்பேரணிக்கு தமிழர் விடுதலை கூட்டணி உட்பட பல கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள இ. தொ. கா. அலுவலகம் முன்பாகக்கடந்த 2 ஆம் திகதி பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பு மற்றும் வீரவிதான ஆகியன இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்தே இ. தொ. கா. இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளது.

[10 ஆம் பக்கம் பார்க்க]



அப்ப அங்கு ஒரு சட்டம் இங்கு ஒரு சட்டம் போல...!

## வீரவிதான இயக்கம் மீது நடவடிக்கை எடுக்குக

### டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் இனவாதத்தைத் தூண்டி வரும் சிங்கள வீரவிதான இயக்கத்துக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கள வீரவிதான இயக்கத்தின் சமீபத்திய அறிக்கைகள், நடவடிக்கைகள் நாட்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## புனர்வாழ்வுப் பகுதி அடையாள பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் செயலகத்தில் இயங்கும் புனர்வாழ்வுப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா புளொட் முகாம்களில் படையினர் நேற்றுத் தேடுதல்

### 18 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன

வவுனியா, ஜூன் 10

வவுனியா கோயில் குளம் பகுதியில் அமைந்துள்ள புளொட் முகாமும் ரம்பைக் குளத்தில் அமைந்துள்ள மலர் மாளிகை புளொட் முகாமும் படையினரால் நேற்றுக் காலை திடீரென சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தேடுதல்களின் போது இரு புளொட் முகாம்களில் இருந்தும் 18 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

காலை 10.30 மணியளவில் மேற்படி இரு முகாம்களையும் சுற்றிவளைத்த படையினர் பகல் 12 மணி வரை தேடுதல்களை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

புளொட்அமைப்பின் உறுப்பினர்கள் வவுனியாவில் சிறு ஆயுதங்களுடன் நடமாடினாலும் அவர்களை உடனடியாகக் கைது செய்து அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றுமாறு வவுனியா படை அதிகாரிகளுக்குஅவசர உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாக படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் வவுனியா

[10 ஆம் பக்கம் பார்க்க]

## ராஜபக்ஷ குடும்பத்துக்கு பாதுகாப்பு வழங்குக

### ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 10

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் முக்கிய சாட்சியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் குடும்பத்தினருக்கு உடனடியாகப் பாதுகாப்பு வழங்குமாறு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாரிடம் கோரியுள்ளது.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கேசன்துறை முகாமில் 42 பேர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் படையினரால் கைதுசெய்யப்பட்ட 42 பேர் காங்கேசன்துறை தடுப்புமுகாமில் தற்பொழுது தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த முகாமுக்கு நேற்று விஜயம்செய்த யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். சிறீதரனும் அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கமும் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிட்டனர்.

கடந்த இரு வாரங்களில் மட்டும் 19 பேர் இங்கு கொண்டுவரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் இருவர் பெண்கள் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்த 19 கைதிகளின் விவரமும் வருமாறு:-

பெருமாள் லதா, ஞானம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் இன்று தென்மாகாண சபைத்தேர்தல்

கொழும்பு, ஜூன் 10

தென்மாகாண சபைக்கான தேர்தல் இன்று வியாழக்கிழமை பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் நடைபெறுகிறது.

தேர்தல் தொடர்பானசகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று மாலை அறிவித்தார்.

வாக்களிப்பின் போதும் பின்னரும் ஏற்படக்கூடிய எந்த ஒரு குழப்பத்தையும் சமாளிக்கக் கூடியதாக பொலீஸாரும் முப்படையினரும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இன்று நடைபெறும் தேர்தலின் போது மோசடிகள் எதுவும் இடம்பெறாத வகையில் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறந்தவர்களின் பெயரில் எவராவது வாக்களிப்பில் ஈடுபடலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் சுமார் 5 ஆயிரம் இறந்தவர்களின் பெயர் விவரங்கள் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-7)

## மாநகர சபைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதி மேயர் ந. ரவிராஜ் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்.

இதேவேளை மாநகரசபையின் நிதிக்குழு மற்றும் மராமத்துக் குழு, சுகாதாரக்குழு ஆகியவற்றின் கூட்டங்கள் நேற்று நடைபெற்றன.

இந்தக் குழுக் கூட்டங்கள் எதிலும் புளொட் அமைப்பின் மாநகரசபை உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி. மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

(இ-7-5-ரி)

## கைதான இராணுவ கப்டன் விளக்க மறியலில்!

### நேற்று நீதிமன்றில் ஆஜர்

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு சித்தாண்டி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கப்டன் பேர்னாட் செலாட் என்பவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற மேலதிக நீதிவான் கே. தட்சணாமூர்த்தி நேற்று உத்தரவிட்டார்.

கடந்த 7 ஆம் திகதி மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்

[10 ஆம் பக்கம்பார்க்க]


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலிகளின் அழைப்புக்கு புளொட் பிரமுகர் பதில்

விடுதலைப்புலிகள் குறைந்தது ஒரு வருட காலத்துக்கு எந்தவொரு இயக்க உறுப்பினர்கள் மீதும் தாக்குதல் நடத்தாது தமது நம்பகத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும்.

புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

தமிழ் இயக்க உறுப்பினர்களை தம்முடன் இணையுமாறு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அழைப்பு தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏனைய தமிழ் இயக்க உறுப்பினர்களை புலிகளுடன் இணையுமாறு 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்திருப்பதை நாம் அறிவிப்பாளரின் அறிவிப்பாகவே கருதுகின்றோம்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக புலிகள் பின்பற்றி வந்த பாசிசக் கொள்கையைக் கைவிடுவதென்பதை நாம் ஒரே நாளில் நம்பிவிடமுடியாது. எவருமே புலிகளை எந்த விதத்திலும் நம்ப முடியாத சூழ்நிலையில் இருக்கும் இவ்வேளை புலிகளின் தலைவர் பிரபாகரனின் சொல்லும் செயல்களும் நம்பிக்கை ஊட்டக்கூடியதாக அமைய வேண்டும்.

'புலிகளின் குரல்' வானொலி அறிவிப்பை நாம் நம்ப முடியாதுள்ளது. இந்த வானொலி கடந்த காலங்களில் உண்மைக்குப் புறம்பான அறிவித்தல்களை விடுத்துள்ளதால் காற்றலையில் வந்த இந்த அறிவிப்பை நாம் ஒரு முக்கியமான அறிவிப்பாகக் கருதவில்லை.

பரஸ்பர எமது கடந்த கால விர முரண்பாடுகளை நீக்கி என்று ஐக்கியமாகின்றோமோ அன்றே எமக்கு விடுதலை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். கற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ். இந்துக்கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்தும் சதுரங்கச் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பமாகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் 25 பாடசாலை அணிகளைச் சேர்ந்த நானூற்றுக்கும் மேற்பட்ட சதுரங்க வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். (ஐ-க)

# பயிற்சி நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 10

கைதடி அரச வடிசாலைக் கூட்டுத்தாபனத்துக்கும் அரச முதியோர் இல்லத்துக்கும் அருகில் உள்ள யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கண்பார்வையற்றவர்களுக்கான சுயமுயற்சி தொழிற் பயிற்சி நிலைய கட்டட திறப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தொழிற் பயிற்சிநிலையத்தைத் திறந்து வைப்பார்.

கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் பி. சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பி. செந்தில்நந்தன், டாக்டர். சி, சிவஞானசுந்தரம் (நந்தி) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

# வளிமண்டலவியல் திணைக்கள பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 10

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வளிமண்டலவியல் அவதானிப்பாளர்கள், வளிமண்டலவியல் தொடர்பியலாளர் பதவிக்கு ஆள் சேர்ப்பதற்காக கடந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளின் படி யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று பேர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள வளிமண்டலவியல் திணைக்களம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் பற்றிய விவரங்களை 'உதயன்' பணிமனைக்கு நேற்று அனுப்பிவைத்துள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

வி. ரமேஷ்குமார் (84/4 தபால்பெட்டிலேன், வண்ணார்பண்ணை,) கே. விக்னரூபன், (கரம்பைக் குறிச்சி, கிழக்கு வரணி) ரி பிரதீபன் (அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை).

மேற்படி மூன்று பேருக்குமான நேர்முகப் பரீட்சைகள் இம் மாதம் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 'இல. 383, பௌத்தலோக மாவத்த, கொழும்பு-7' என்ற முகவரியில் உள்ள வளிமண்டலவியல் திணைக்கள தலைமை அலுவலகத்தில் நடைபெறும் எனவும்—

சம்பந்தப் பட்டவர்களுக்குரிய நேர்முகப்பரீட்சைக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் குறித்த விவரங்களை உதயன் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ஐ-7)

# கூ. சங்கம் கடன் உதவி

நெடுந்தீவு, ஜூன் 10

அனலைதீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் கூட்டுறவுக் கிராமிய வங்கி ஊடாக கைத்தொழில், விவசாயம், கால்நடை வளர்ப்பு, உணவு பதனிடல், கடற்றொழில் வியாபாரம் இயந்திரக் கொள்வனவு போன்றவற்றிற்காக தனது உறுப்பினர்களுக்கு கடன் உதவிகளை வழங்கவுள்ளது. (ஐ-111)

# ஊர்காவற்றுறைக்கு மின் கிடைக்கவில்லை

நெடுந்தீவு, ஜூன் 10

தீவுப்பகுதியின் பிரதான நகரான ஊர்காவற்றுறைக்கு இதுவரை மின்சார விநியோகம் கிடைக்கவில்லை.

வேலணையில் இருந்து தம்பாட்டிவரை மின்விநியோகம் தற்சமயம் வழங்கப்படுகிறது. எனினும் மிக முக்கியமான ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு இன்னமும் மின் இணைப்புக் கிடைக்காததால் ஆஸ்பத்திரி இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

தம்பாட்டியில் இருந்து ஊர்காவற்றுறை வைத்தியசாலையின் இடைத்தூரம் அரை மைல்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-111)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 10

தெல்லிப்பழை கிழக்கு அசித்தியம்பதி அண்ணமார் ஆலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து வளர்த்துப் பாவனைப் பூசையும் பொங்கலும் இடம் பெறும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி இரவு எட்டாம் மடைப் பூசை இடம் பெறவுள்ளது. (க-152)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன்10

வண்ணார் பண்ணை இல்னர் ஒழுங்கை மகாமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை 3 மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் பிற்பகல் ஒரு மணிக்கும் இடம் பெறவுள்ளது. (க)

★ ★ ★

தென்மராட்சி ஜூன் 10

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறவுள்ளது. (க-117)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி அருள்மிகு கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (க-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 10

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

சுழிபுரம் ஜூன் 10

சுழிபுரம் பறாளை [ஈஸ்வர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும் (க-28)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன்10

வட்டுக்கோட்டை பங்குரு ஸ்ரீ முருகமூர்த்தி கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை 5 மணிக்கு சுவாமி வீதி வலம் வருதலைத் தொடர்ந்து உற்சவம் நிறைவு பெறும். (க-30)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 10

காரைநகர் கள்வித்தெரு அண்டவேல் சித்திவிக்கினேஸ்வரர் ஆலய பிராயச்சித்த மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-73-173-7)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன்10

தொல்புரம்மேற்குஸ்ரீஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 8 ஆம் திகதி மாலை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர் வரும் 16 ஆம் திகதி காலை விசேடசங்காபிஷேகம், பூசைஆராதனையுடன் உற்சவம் நிறைவு பெறும். (க-30)

# கணனிப் பயிற்சி

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிக்கு வலய கல்வி அலுவலகத்தினால் கணனி இயந்திரம் வழங்கப்பட்டதை யடுத்து கணனிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற் கட்டமாக சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள அரச திணைக்கள எழுதுநர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் ஆகியோருக்கு பயிற்சிகள் வழங்கப்படுவதாக கல்லூரி அதிபர் மு. நாகேந்திரராசா தெரிவித்தார். (ஐ-117)

# மின் தூண்கள் நடப்படுகின்றன

கொழும்புத்துறை, ஜூன் 10

தொல்புரம் வழக்கம் பரை பிரதான வீதியில் இருந்து பண்ணாகம் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக மின் தூண்கள் நடப்பட்டு மின் இணைப்புக் கம்பிகள் பொருத்தப்பட்டு வருகின்றன. (ஐ-36)

# 12 பட்டதாரிகள் நியமனம்

வடமராட்சி, ஜூன் 10

யாழ். மாவட்ட சமநல சேவைத் திணைக்களத்துக்கு சமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக 12 பட்டதாரிப் பயிலுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இருவாரகால பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களில் பதில் பெரும்பாக உத்தியோகத்தர்களாக கடமையாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

## இப்படியும் நடக்கிறது

# கட்டிய இடத்தில் ஆட்டை வெட்டித் திருட முயற்சி!

வலிகாமம் தெற்கு, ஜூன் 10

காலமாற்றங்களுக்கு அமைய களவுகளின் தன்மையிலும் மாற்றங்களும் புதுமைகளும் நிகழ்ந்து வருகின்றன.

உயிருடன் களவாடிய வீட்டுமிருகங்கள், தற்போது அவை கட்டப்பட்டிருக்கும் இடங்களில் வைத்தே வெட்டப்பட்டு இறைச்சியாக எடுத்துச் செல்லப்படும் சம்பவங்களும் தற்போது நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை இரவு உடுவிலில் உள்ள கற்பொக்கணை என்ற பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது —

உடுவில் — கற்பொக்கணை என்ற இடத்தில் உள்ள வீடொன்றில் ஆண்கள் இல்லாத சமயம் பார்த்து இரவு வேளையில் கொட்டிலில் கட்டப்பட்டிருந்த ஆட்டினை வெட்டி இறைச்சியைக் களவாடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டுக்கு அண்மையில் உள்ள ஆலயம் ஒன்றில் மறுநாள் காலை நடைபெற இருந்த பொங்கல் நிகழ்வுக்கான ஆயத்தங்களை மேற்கொள்வதென வீட்டில் உள்ள ஆண்கள் சென்றுவிட்ட வேளையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

விட்டு கொட்டிலில் நின்ற ஆடு முனகும் சத்தம் கேட்டு வீட்டில் இருந்த பெண்கள் லைற்றைப்போட்டு பார்த்த போது ஆடு வெட்டப்பட்டுக் கிடப்பதைக் கண்டுள்ளனர். ஆரவம் கேட்ட கள்வர்கள் வெட்டிய ஆட்டை அப்படியே போட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டனராம்.

வெட்டப்பட்ட ஆட்டின் பெறுமதி சுமார் ஐயாயிரம் ரூபா என அதன் உரிமையாளர் தெரிவித்தார். (ஐ-152)

தரமான புளொக் வலைகள் தயாரிப்பதற்கும்
தரமான போட்டோ பிரதிகளுக்கும்
சிறந்த இடம்
அருண்
புளொக் தயாரிப்பாளர்கள்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7831)

கண்ணீர்ப் பூக்கள்
யாழ். ப. நோ. கூ. சங்க சக பணியாளர்
திரு. அன்ரன் ஜெறாட்
அவர்களின் தந்தையார்
பெஞ்சமின் குமாரகுலசிங்கம் அவர்கள்
காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
பணிப்பாளர் சபை, பணியாளர்கள்
யாழ். ப நோ. கூ. சங்கம்
கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
யாழ். பட்டணக் கிளை.
(66499)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கரவை கிழாரின் தணியாத தாகம் வரலாற்றுக் கற்பனை நாடகம் விற்பனையாகிறது. பதினேழாம் நூற்றாண்டில் டச்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மாந்தையின் மாண்பை நிலைநாட்டிய பனங்காம மன்னன் கயிலை வன்னியனின் வீர வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. இந் நூல் எல்லாப் புத்தகசாலைகளிலும் இடைக்கும்.

(66488)

ஜுவலரி கட்டிங் மெஷின் விற்பனைக்கு ண்டு. தொடர்பு: இல. 9, பஸ் நிலையம் சாவகச்சேரி.

(சி/7824)

## பொருளியல்

பேரினப் பொருளாதாரம், வெளிவாரி விளைவுகள், சர்வதேசவர்த்தகம், வர்த்தக மாற்றுவிகிதம் ஆகிய நூல்கள் யாழ்ப்பாண நகர புத்தக சாலைகளில் விற்பனையாகின்றன ஆசிரியர் வே. கருணாகரன். (66356)

## தவறிவிட்டது

பத்தாவத்தை இலவாலலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் நகுலேஸ்வரி என்பவரது விசேட அடையாள அட்டை [090701497] 15 - 05 - 99 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டை முகவரியில் அல்லது சி. சுப்பிரமணியம், தபாலகம், அளவெட்டி என்னும் முகவரியில் தத்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும். (66469)

## அறிமுகப் பயிற்சி

கொழும்புத்துறை, ஜூன் 10 காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்க ஆதரவில் சாரண ஆசிரியர்களுக்கான அறிமுகப் பயிற்சிக்கு குருளைச் சாரண (கலைக்கூறு II) பயிற்சி வகுப்பு என்பன எதிர்வரும் 11, 12, 13 ஆம் திகதிகளில் சங்கானை சிவப்பிரகாசமகா வித்தியாலயத்தில் பயிற்றுனர் தலைவர் த. நா. போஜனின் நெறிப்படுத்தலில் நடைபெறும். (ஐ-30)

## ஆண்டு நிறைவு விழா

தென்மராட்சி, ஜூன் 10 சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவும், 1999 — 2000 ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவமும் ஜூன் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு டச்சு வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் தலைவர் லயன் டாக்டர் பீ வீ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 பி பிராந்தியம் எட்டின் பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தமும் லயன் சீமாட்டி சிவயோகம் அருளானந்தமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி எஸ். குணராசாவும் கலந்து கொள்வர். (ஐ 117)

## விவசாயிகளுக்கு உதவி

சண்டிலிப்பாய், ஜூன் 10 பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த இரு விவசாயிகளுக்கு 'சீடா' திட்டத்தின் கீழ் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் தவணைக் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-135)

---

# பரி. யோவான் முதலுதவிச் சங்கமும் படையும் (இலங்கை)

## பகிரங்க அறிவித்தல்

யாழ். மாவட்டத்தின் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகள் கிராமிய யாழ். மாவட்டத்திற்குள் உள்ளடங்குகின்றன.

இப்பிரதேச தொடர்புகள் அனைத்தும் என்னூடாக இடம்பெறல் வேண்டும். பாடசாலைப் பிரிவுகள் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரின் தெரியப்படுத்தலுடன் என் ஊடாகத் தொடர்புறல் வேண்டும்

த. நா. போஜன்,
மாவட்ட ஆணையாளர்,
கிராமிய யாழ். மாவட்டம்.

45, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.
09 - 06 - 1999

(66496)

---

யாழ். மாவட்ட

# வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் அதிர்ஷ்டலாபச்சீட்டு பற்றிய அறிவித்தல்

19—05—99 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் 20—05—99 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன. இக்காலவரை தங்களின் பரிசில்களைக் கோராதவர்கள் 19—06—99 சனிக்கிழமை பி. ப. 1-00 மணிக்கு முன் ஆதாரங்களைச் சமர்ப்பித்துப் பரிசில்களைப் பெறத் தவறின் இத்தினத்திற்குப்பின் அதனைக் கோருவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவர் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

யாழ். மாவட்ட
வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்.

27, நவீன சந்தை [மேல்மாடி]
யாழ்ப்பாணம்.

[சி/7832[

---

# கண்ணீர் அஞ்சலி

புலோலி மேற்கு விநாயகர் தரும நிதியத்தின் நிறுவனரும், வதிரி ஸ்ரீபரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆச்சிரமத்தின் போசகருமாகிய தரும வள்ளலும் சிறந்த சமூக சேவையாளருமாகிய

அமரர்

## ஆ. சி. முருகுப்பிள்ளை ஐயா

அவர்கள் 05-06-99 இல் இறைபதமெய்தியதையிட்டு ஆச்சிரம வாசிகள் அனைவரும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையுமடைந்துள்ளார்கள். அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கும் மற்றும் நிலையத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

ந. இரத்தினகோபால்
முகாமையாளர்
ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்,
வதிரி, கரவெட்டி.

(சி/7834)

---

வடமராட்சி
# தூரிகை நுண்கலை வளாகம்
வழங்கும்
# மனைப் பொருளியல் கலைகள் சார்ந்த கண்காட்சி - 1999 & காட்சிப் பொருள் விற்பனை

காலம்: 12, 13 ஜூன், 99 (சனி, ஞாயிறு)

இடம்: தூரிகை வளாகம்.
மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.

அனைவரும் வருக!

அதிபர்கள், மாணவர்கள்.

தூரிகை நுண்கலை வளாகம்

(சி/7835)

---

# வெளிவந்துவிட்டது

தென்னிந்திய சஞ்சிகைகள் மே மாதம் வரையானது
மற்றும், அனைத்து தென்னிந்திய நாவல்களும்
பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு

மண்டேலா றேடர்
No. 2, பஸ் நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[66476]

---

வலி - கிழக்கு
# கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
## வாராந்த கால்நடைச் சந்தை

நீர்வேலி பூதர்மடத்தடியில் அமைந்துள்ள காரியாலயத்தில் சனிக்கிழமைகளில் காலை 8-00 மணி முதல் 12-00 மணிவரை ஒருமாத வளர்ப்புக்கோழிக் குஞ்சுகளும், இறைச்சிக் கோழிகளும், நல்லின ஆடு, மாடு என்பனவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன, எனவே வாங்க விரும்புபவர்களும் விற்பனைசெய்ய உள்ளோரும் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

– செயலாளர்

(66502)

---

# நன்றி நவிலல்

கடந்த 29—05—99 ஆம் திகதியன்று தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை ஆதரவில் என்னைக் கௌரவித்து "ஞான பண்டித சேவா சுரபி" என்ற கௌரவ விருதினை வழங்கிய மேற்படி பேரவையினருக்கும் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் வல்லை ஸ்ரீ வாலாம்பிகை சமேத தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள், பண்டிதர் கை. நமசிவாயக் குருக்கள் உட்பட ஏனைய பெரியோர்களுக்கும், விழாவில் கலந்து சிறப்பித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"ஞான பண்டித சேவா சுரபி"
வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை
பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி.


கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(சி/ 7833)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 29 – 12 – 1960



உதிர்வு 11 – 05 – 1999

அமரர்

## இராசையா அன்ரனி
(வெல்டிங் பாலா)

இன் சொல்லே பேசி நின்ற பாலா எம்
இதய மனதைக் கவர்ந்திருந்த பாலா
இன் முகமே காட்டி நின்ற பாலா
எம்மை ஏன் மறந்து சென்றாயோ பாலா

நேரிலும் தொலைபேசி மூலமும் கடிதம் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு எமது அன்பார்ந்த நன்றிகள்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதர சகோதரிமார், மைத்துனர்மார், மைத்துனிமார், மருமக்கள், பெறாமகன் மற்றும் உற்றார், உறவினர்.

இல. 10 கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

[66511]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலிருந்து திரும்பிய மாணவர் பாடசாலை அனுமதிபெறுவதில் சிரமம்

வன்னிப் பகுதிகளில் இருந்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்பதில் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வன்னி சென்ற பிள்ளைகளில் பலர் அங்கு பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் இருந்துள்ளனர்.

மற்றும் சிலர் பாடசாலை சென்ற போதிலும் வன்னியில் இடம்பெற்று வருகின்ற தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் காரணமாகப் பாடசாலைகளில் இருந்து விடுகைப் பத்திரம் பெற்றுவரவில்லை என்ற காரணத்தினால் அவர்களை அனுமதிக்க முடியாது என்று அதிபர்கள் மறுத்து வருவதாகப் பெற்றோர் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (ஐ–86)

## பன்னாலைக் கிராமத்தில் மலேரியா பரவுகிறது

வலிகாமம், தெற்கு ஜூன் 10

அண்மையில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட வலிகாமம் வடக்குத் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பன்னாலைக் கிராமத்தில் மலேரியாக் காய்ச்சலினால் மக்கள் அடிக்கடி பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நீண்டகாலம் கைவிடப்பட்ட நிலையில் இருந்த இக்கிராமம் பற்றைகளாலும், குப்பை, கூழங்களாலும் அசுத்தமடைந்திருப்பதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாகி உள்ளது.

நுளம்புகள் கடிப்பதனால் இப்பகுதியில் குடியேறியுள்ள மக்கள் மலேரியா நோயின் தாக்கத்துக்கு அடிக்கடி உள்ளாகி வருகின்றனர்.

இக் கிராமத்துக்கு அருகே உள்ள வித்தகபுரம், கருகம்பானை, கொல்லங்கலட்டி போன்ற இடங்களில் இன்னமும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இப்பகுதிகளில் காணப்படும் சுகாதாரச் சீர்கேடுகளினால் நுளம்புகளின் தாக்கம் அதிகரித்துள்ளது.

பன்னாலைக் கிராமத்தில் மலேரியாத் தடை மருந்துகள் நீண்டகாலமாகத் தெளிக்கப்படவில்லை. (ஐ-152)

## உடற்பயிற்சிப் போட்டி

குருநகர், ஜூன் 10

தீவக வலய உடற்பயிற்சிப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் வேலணைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் என். நிமலநாதன் தலைமையில் நடைபெற உள்ளது. (க-51)

## குடிதண்ணீர் விநியோகம்

சண்டிலிப்பாய், ஜூன் 10

'போரூட்' நிறுவனம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது. (ஐ-135)

## வாராந்த நிகழ்வு

நல்லூர், ஜூன் 10

சந்நிதியான ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியை திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியத்தின் இன்னிசை இடம் பெறும்.

முன்னதாக அறிமுகவுரையை ஓய்வு பெற்ற ஆசிரியர் சி. ஆனந்தராசா நிகழ்த்துவார். (ஐ-103-30-173)

## ஆசிரியருக்கான செயலமர்வு

வலிகாமம் தெற்கு, ஜூன் 10

தரம் 10, 11 வகுப்புகளில் தமிழ்மொழி கற்பிக்கும் வலிகாமம் வலய ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கும், செயலமர்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை மருதனார்மடம் யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மனையியல் பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (க-152)

## வீதித்தடை நீக்கம்

சண்டிலிப்பாய், ஜூன் 10

இணுவில் பிரதான வீதியில் வீதிக்கு குறுக்காக போடப்பட்டிருந்த மூன்று வரம்புகள் இவ்வாரம் பாதுகாப்பு படையினரால் அகற்றப்பட்டுள்ளன.

இணுவிலில் உள்ள பாதுகாப்புப் படை முகாம் பகுதியில் போடப்பட்டிருந்த இந்த வீதி வரம்புகள் அகற்றப்பட்டதால் வாகனங்கள் யாவும் இலகுவாக இவ் வீதியால் போக்குவரத்துச் செய்வதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. (ஐ-135)

## வீடமைக்க நிதி உதவி

சண்டிலிப்பாய், ஜூன் 10

'போரூட்' நிறுவனம் வலிகாமம் மேற்கு, வலி. தென்மேற்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ள வசதியற்ற குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு நிதி உதவி வழங்கி வருகின்றது.

இப் பிரிவுகளில் இருபது குறிச்சிகளில் இந்த வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)


## G.A.Q 1ST in Com (வெளிவாரி)

★ யாழ். பல்கலைக்கழகத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக விண்ணப்ப முடிவு திகதி 15-06-99

★ A/L இல் 3 பாடங்களில் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பித்தல் விரிவுரைகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(66495)


## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிறிபாலகணேசமூர்த்தி சுஜீந்திரன்**
(முகுந்தன்)

மண்ணில் 03–03–1971
விண்ணில் 10–06–1992

இனப்பெருமை இயம்பி நின்ற இன்னுயிரே தவமலரே!
மனச்சுமையோ பெருகுதைய்யா ஆண்டே–ழு ஆனாலும்
நனவு நிலைத்தரிசனமே முகுந்தா நம்முயிரே
தனமுயிராய்ப் போனதேன் தேடரிய தெய்வீகமே!


பிரிவால் துயருறும்
மம்மி, பப்பா, மம்மா,
தம்பிமார், தங்கை,
மாமாமார், அன்ரிமார்.

"திருமகள்வாசா",
வட்டுவத்தை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

[60494)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 07 – 05 – 1958



உதிர்வு 11 – 05 – 1999

**அமரர் கந்தையா பாலசுப்பிரமணியம்**
[சின்னராசா]

அன்பின் திருவுருவே! எம்மையெல்லாம் பேணிப் பாதுகாத்து வந்தீர். உற்றார், உறவினர், நண்பர்களையெல்லாம் உபசரித்தீர்; இல்லையென்று வந்தோர்க்கு மனம் கோணாது வாரிவழங்கினீர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டினீர். உங்கள் நினைவலைகள் எங்கள் அன்பு நெஞ்சங்களை விட்டு நீங்காதையா! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனருளை வேண்டுகிறோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு வந்து எமக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், எமக்கு அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள், சித்தமருத்துவத்துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.**

எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

(சி/7823)

உ
சிவமயம்

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



கொக்குவில் கிழக்கு–பிரம்படி
**அமரர் சு. ஆறுமுகராசா**
(பிரம்படி ஞான வைரவர் ஆலய பரிபாலகர்)

தவப்பேறு 08–08–1932
சிவப்பேறு 23–05–1998

திதி: 10 06–1999

அனுதினமும் ஆண்டவனை அர்ச்சித்து
அலங்கரித்து வாழ்ந்து
கணப்பொழுதில் இவ்வுலகை நீத்த
கருணை உள்ளமே — காண்பது எங்கே?


அன்பு மனைவி
திருமதி சரோஜினிதேவி ஆறுமுகராசா
சகோதரி, மருமக்கள்,
உறவினர்.

பிரம்படி,
கொக்குவில்.

(சி/7829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18 — 08 — 1933 | 11 — 05 — 1999 |

அமரர்

### சதாசிவம் சண்முகம்

(இளைப்பாறிய ஆசிரியர் யா/ சா.இ.ஆ. பாடசாலை)

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி அனுதாபங்களையும், அஞ்சலிகளையும் இன்னும் வேண்டிய உதவிகளையும் புரிந்த உற்றார்: உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம.

இன்று (10—06—99) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்.

மீசாலை மேற்கு, மீசாலை. (66461)

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1942 — 05 — 14 | 1998 — 05 — 22 |

அமரர்

### கந்தையா சிதம்பரநாதர்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

திதி: 1999–06–10

ஆண்டு ஒன்று புரண்டதுவோ
ஆண்டவன் அடி நீர் சேர்ந்து
ஆசையாக அப்பா என்று அழைக்க
எம் அருகில் நீர் இல்லை
காலனின் ஏலத்தில் உம் பிரிவு
எம்மை வாட்டுகிறது இதுதான் விதியா?
எம் அன்புக்கரங்கள் கூப்பி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

கைதடி மேற்கு,
கைதடி. (66464)

## அதிபர்கள் கருத்தரங்கு

வலிகாமம், தெற்கு ஜூன் 10

பாடமேம்பாட்டுக் கருத்தரங்கு தொடரின் சிழ் பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது.

பாடசாலைகளில் ஒவ்வொரு பாடத்தையும் மாணவர்மயப்படுத்தி மேம்பாடடைய வைப்பது சம்பந்தமாக இக்கருத்தரங்கில் விளக்கம் தரப்பட உள்ளது.

ஒவ்வொரு பாடத்துக்கும் பொறுப்பாக உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் இக் கருத்தரங்கில் செயன் முறை விளக்கமளிக்க உள்ளனர்.

[ஐ-152]

## கிளிநொச்சியில் விமான தாக்குதலில் இருவர் பலி!

சண்டிலிப்பாய், ஜூன் 10

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி திருவையாறு பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவரும், அவரது மைத்துனியும் பலியாகியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

வட்டக்கச்சியில் வசித்து வந்த இவர்கள் திருவையாறிலுள்ள தமதுவீட்டை பார்க்க சென்ற சமயமே இவ்வாறு பலியானதாக அறியப்படுகின்றது.

வன்னியிலிருந்து கனடா நாட்டிலுள்ள இவர்களின் உறவினருக்கு இது பற்றி கிடைத்த தகவலை அடுத்து கனடாவிலுள்ளவர்கள் தொலைபேசிமூலம் இவர்கள் இருவரும் பலியான விபரத்தை இறந்தோரின் இங்குள்ள உறவினருக்கு தெரிவித்ததாக அறியப்படுகின்றது.

அளவெட்டியைச் சேர்ந்தவர்களான தனபாலசிங்கம், பரமேஸ்வரன் ஜெயந்தி ஆகியோரே இந்த விமானக்குண்டு வீச்சில்பலியானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## சங்கானையில் பண்ணை

சண்டிலிப்பாய், ஜூன் 10

சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் சண்டிலிப்பாய் — சங்கானை பிரதான வீதிக்கு அருகில் புதிதாக அமைந்துள்ள பண்ணையில் முயல்கள், தாராக்கள், கினிக் கோழிகள் என்பன வளர்க்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை —

இங்குள்ள கோழிப் பண்ணையில் முட்டை போடும் கோழிகள், இறைச்சிக்கோழிகள் என்று 500-க்கு மேற்பட்ட கோழிகளும் வளர்க்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் ச. செல்வரத்தினம் தெரிவித்தார். (ஐ-135)


மீண்டும்
அண்ணா கோப்பியை
உங்கள் முன்னிலையிலேயே
அரைத்துப் பெற்றுக்கொள்ள

**அண்ணா கோப்பிக் கடை**


4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

[சி/7828]





## முதலாம் வருட நினைவலைகள்



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 02 — 08 — 1930 | 21 — 06 — 1998 |

அமரர்

### கந்தையா துரைராசா

(இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்)

திதி: 10 — 06 — 1999

எமை வாழவைத்த தெய்வமே! நீங்கள் பொய்யுடல் நீத்து மெய்யடி காணச் சென்ற வைகாசி மாத அபரபட்ச துவாதசி நாளில் ஈடுசெய்ய முடியாத உங்கள் இழப்பின் கனத்தை நெஞ்சங்களில் சுமந்து கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

— குடும்பத்தினர்

சூராவத்தை,
சுன்னாகம். (66449)

## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

## பதவி வெற்றிடம்

1. பதவி: கணக்குப் பதிவாளர் (தற்காலிகம்)
2. பதவி இல: 165/88
3. சம்பள அளவுத் திட்டம்:
   2950 — 4700
   10X75 — 10X100
4. தகைமைகள்:
   அ) கூட்டுறவு ஊழியர் 9-வது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதவியில் அல்லது இலிகிதர் பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 11-வது சம்பளத் திட்டத்தில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உள்ளவர்.
   அல்லது
   ஆ) கூட்டுறவு ஊழியர் தராதரப் பரீட்சை உயர்தரம்/ க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தி.
5. வயதெல்லை: 18 — 40
6. சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
7. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை ரூபா 10 செலுத்தி பெற்று பூரணப்படுத்தி 25 - 6 - 99 ஆம் திகதிக்குள் பதிவுத் தபால்மூலம், 'பொது முகாமையாளர், சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
8. கூட்டுறவுச் சேவையிலுள்ளவர்கள் அந்தந்த சங்கத்தினூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

- பொது முகாமையாளர்

சங்கானை பனை தென்னை வள-
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
(வரையுள்ளது)

(66493)


விஸ்வ விராட் பிரம்மனே நம

## புதுக்கடைத் திறப்பு விழா

ஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ

நிகழும் பிரமாதி வருடம் வைகாசி மாதம் 27 ஆந் திகதி (10 - 06 - 99) வியாழக்கிழமை காலை 9-15 மணிதொடக்கம் 10-45 மணிவரையுள்ள கடக லக்கின சுபவேளையில்

## உதயகதிரவன் நகை மாடம்

**UTHAYA KATHIRAVAN NAKAIMADAM**

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த திருவருள் கூடியுள்ளது; இதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

ரவி
உரிமையாளர்

இல. 172, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (66466)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஜனநாயகக் கைப்பொம்மை

பல்கலைக்கழகத் திருத்தச் சட்ட மூலத்தை அரசாங்கம் கௌரவமாக வாபஸ் வாங்கிவிட்டது. இந்தத் திருத்தச் சட்ட மூலம் அரசமைப்புக்கு விரோதமானது என்பதனை — உயர் நீதிமன்றின் தீர்ப்பை — அரசு ஏற்றுக்கொண்டு பின் வாங்கியது விவேகமான செயலாகும்.

பல்கலைக்கழக நிர்வாகம் சம்பந்தமாக அரசாங்கம் கொண்டு வந்த திருத்தச் சட்ட மூலம் சுமுகமான நிர்வாகத்துக்குப் பல கட்டுப்பாடுகளையும், நிர்வாக அதிகாரிகள் பதவிகளை ஒழித்து வேறு பல பாதகமான விளைவுகளையும் உண்டாக்குவதாக அமைந்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், நிறைவேற்று அதிகாரிகள் என்று பல தரப்பினரும் திருத்தச்சட்ட மூலத்தின் கெடுதல்களை முதலிலேயே எடுத்துக்கூறியிருந்தனர். ஆனால் அதற்குச் செவி சாய்க்காமல் அரசாங்கம் திருத்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

நிறைவேற்று அதிகாரிகள் தாக்கல் செய்த வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் திருத்தச் சட்ட மூலம் அரசமைப்புக்கு முரணானது என்று தெரிவித்திருந்தது.

அதனையும் பொருட்படுத்தாது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதானால் அரசுக்கு விசேட பெரும்பான்மை தேவை. நாடாளுமன்றத்தில் கொண்டு வரும் ஏனைய சட்ட மூலங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான சொற்ப பெரும்பான்மையை பெறுவதற்கே அல்லாடும் அரசு விசேட பெரும்பான்மையைத் திரட்டுவது எங்ஙனம்?

நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க வேண்டிய கடப்பாடு இருப்பதாலும் போதிய பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காது என்பது நிச்சயம் என்றதாலும் அரசாங்கம் தனது பலவீனத்தைக் காட்டிக் கொள்ள விரும்பாமல் சமயோசிதமாகச் செயற்பட்டுள்ளது.

மக்களுக்கு நன்மையை விடத் தீமையையே அதிகம் செய்கின்ற இத்தகைய சட்ட மூலங்களைக் கொண்டு வந்து அவமானப்படுவதுஏன்?

பதவியில் இருக்கிறோம் என்பதற்காக அரசாங்கமோ அமைச்சர்களோ தாம் நினைப்பதனை மக்கள்மீது திணித்துக் குதிரை விட நினைக்கக் கூடாது. உயர்நீதிமன்றத் தீர்ப்பு இதனையே மிக வெளிச்சமாக எடுத்துக்காட்டுகிறது.

மக்களுக்கு — சமூகத்துக்கு — நன்மை பயக்கக்கூடிய திட்டங்களையும் சட்டங்களையும் கொண்டு வருவதாகவே ஆட்சிக் கட்டில் ஏறுவதற்கு முன்னர் அரசியல் கட்சிகள் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகள் வழங்குவதுண்டு.

ஆனால் அதிகாரக் கட்டிலில் ஏறியதும் வாக்குறுதிகளைத் தூக்கி வீசிவிட்டு தமக்கு இஷ்டமானதை நிறைவேற்றுகின்றார்கள் இந்த நிலை மாற்றப்படும் வரை ஜனநாயகம் என்பது ஒரு சிலரின் கைப்பொம்மையாகவே இருக்கும்.

# 31 மீனவரை வெட்டிப் பலிகொண்டு குருநகரை உறையவைத்த கொடுமை

சரியாகப் பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் — 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பத்தாம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை — குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் தமது குடும்பங்களின் ஜீவனோபாயத்துக்காக "தூய ஒளி" படகில் மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றனர். அவ்வேளை மண்டைதீவுக் கடலில் ரோந்து வந்த இலங்கைக் கடற் படையினரால் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குருநகரை அதிர்ச்சியிலும் சோகத்திலும் உறைய வைத்தது.

## உழைக்க ஆண்களே இல்லாமல் அவலப்படுகின்றன பல குடும்பங்கள்

நாளாந்தம் இப்பகுதி மீனவர்கள் இக்கடற்பரப்பில் இப்படகில்சென்றே தொழில் செய்து கரை திரும்புவது அப்போது வழக்கமாக இருந்தது. இறுகிய உடற்கட்டும் ஆஜானுபாகுவான தோற்றமும் உடையவர்கள் இத்தொழிலாளர்கள். எவருக்கும் தீங்கு செய்திராதவர்கள் வரும் பகையையும் சமாதானத்தில் முடிக்கக்கூடிய பொறுமைசாலிகள். கடற்றொழிலும் தமது குடும்ப உயர்வுமே நோக்கமாகக் கொண்டவர்கள் அன்றைய தினம் இளம் வயதுடையவர்களும் மத்திய வயதுடையவர்களும், வயது முதிர்ந்தவர்களும் இருந்தார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன், தம்பிமாரும் இருந்தார்கள் தமது குடும்பத்துக்கு உணவு போடவேண்டும் என்ற நோக்குடனேயே இவர்கள் அன்றைய தினமும் மீன்பிடிக்க ஆழ்கடல் நோக்கிச் சென்றார்கள்

மண்டைதீவுக் கடலிலோ அல்லது ஏனைய யாழ் குடாக்கடலின் எப்பகுதியிலோ மீன்பிடிக்கக் கூடாதென்ற தடைச்சட்டம் அக்காலத்தில் அரசினால் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

இதனால் அவர்கள் அன்றையதினம் வழமைபோல் தமது படகில் இருந்து எதுவித பயமுமின்றி வலை வீசி (வலையில் வரும் மீன்களைப் பிடிக்கக்) கடலைப் பார்த்தவாறு இருந்தனர். அவர்கள் செய்த தொழில் கரைவலையாகும். அதனால் மண்டைதீவுக் கரையையண்டிய பகுதியிலேயே அவர்கள் தொழில் செய்தனர்.

அவர்கள் கண்மூடிக் கண் திறப்பதற்குள்ளாகவே, ஆழ் கடற் பகுதியில் இருந்து கடற்படையினரின் ரோந்துப் படகு அவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவாறு வந்தது. மீனவர்கள் தொழில் செய்யத்தானே கடலுக்குச் சென்றார்கள்? மீன்பிடி உபகரணங்களைத் தவிர ஆள்களைக் கொல்ல துப்பாக்கிகளையா எடுத்துச் சென்றார்கள்? அவர்கள் அப்பாவிகள், நிராயுதபாணிகளும் ஆவர். கடற்படைப் படகில் வந்த கறுப்புச்சட்டைக்காரர்கள் மீனவர்கள் என்று தெரிந்தும் கூட அவர்கள்மீது இரக்கங்காட்டாது அவர்கள் கதறக்கதற துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் கொன்றுபோட்டு விட்டுச் சென்றார்கள்.

### கொலையுண்டவர்கள்

இக்கோரப் படுகொலையில் குருநகரைச் சேர்ந்த மீனவர்களான பெனடிக்ற் கியுபேட் கேசன், பங்கிராஸ் அன்ரனி யூலியஸ், பங்கிராஸ் தார்சிசியஸ், பங்கிராஸ் விமலதாசன், டேமியன் றாபட் உதயகுமார், அருளானந்தம் பெனிவிஸ், அருளானந்தம் பெனடிக்ற், பெனடிக்ற் அலிஸ்ரன், பெனடிக்ற் மகேந்திரன், பற்றிக் அலோசியஸ், அலோசியஸ் விகோரி, அலோசியஸ் டிஷ்க், எமிலியானுஸ் மௌலிஸ் ஈஸ்வரன், ஞானப்பிரகாசம் ஜெயபாலன், ஞானப்பிரகாசம் ஜெபமாத்தன், அன்ரன் செல்டன் வெயின், சவிரியான் யேசுராசா, மூப்பு அன்ரனிதாஸ், செபதேயு சேவியர், மனவல் பயஸ், மனவல் மரியநாயகம், யோண்யோச், யோசேவ் பர்ணாந்து, மனவல் பற்றிக், ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை, கிறிஸ்தோப்பர் எஸ்தாக்கி, செபமாலை யோசேப் சாமிநாதர், முத்துச்சாமி, சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் ஆகியோரும் இன்னும் மண்டைதீவைச் சேர்ந்த ஒருவரும் அன்றைய தினம் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அன்றாடம் தம் வாழ்விற்காக அலை கடலுடன் போராடிய 31 மீனவர்களும் படுகொலை செய்யப்பட்டு ஆண்டுகள் பதின்மூன்றாகிவிட்டன. அதற்கு முன்னர் இத்தகைய சோக நிகழ்வு எதுவும் குருநகரில் இடம்பெறாததால் அது அன்றைய தினம் பெரும் அதிர்ச்சியில் மூழ்கி உறைந்து போனது. அதற்கு முன் இத்தகைய அதிர்ச்சி தரும் படுகொலைகளை குருநகர் என்றுமே கண்டதில்லை.

1964 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட கோரப்புயல் மற்றும் கடற்கொந்தளிப்பினால் குருநகர் மீனவர்கள் சிலர் இறந்தது எதிர்பாராத நிகழ்வு.

### அவலங்கள்

ஆனால் 1986 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ஆம் நாள் மண்டைதீவுக் கடற்பரப்பில் நடந்தது திட்டமிட்ட அழிப்பாகும் இழந்த ஒவ்வொரு மீனவர்களின் உயிரின் பெறுமதியை அந்தக் குடும்பங்களின் உறுப்பினர்கள் உணரும் அளவுக்கு வேறு எவரும் முழுமையாக உணர முடியாது அந்த அளவுக்கு இத்துயர சம்பவம் இக் குடும்பங்களை வாட்டி வருகிறது

விதவைகளாகியுள்ள இளம் பெண்கள் இன்றும் அபலைகளாக அவல வாழ்க்கையே நடத்துகின்றனர். சில குடும்பங்களில் உழைப்பதற்கு ஆண்களே இல்லாமல் அழிக்கப்பட்டனர் என்பது நோக்கற்பாலது.

இன்றைய சூழலிலும் மீனவர்கள் பாதுகாப்பற்ற நிலையிலேயே நாளாந்த சீவியத்துக்காக கடலுக்குச் சென்று வருவதை நாம் உணர்கிறோமா?

இறந்த 31 மீனவர்களுக்குக் குருநகர் சேமக்காலையில் பொதுமக்களால் அமைக்கப்பட்ட ஒரே நினைவுத்தூபி அந்தச் சோக வரலாற்றை குருநகர் மக்களுக்கு இன்றும் நினைவூட்டியவாறு உள்ளது. ஆனால் இம் மீனவர்களின் ஞாபகார்த்தமாக குருநகரின் மத்தியில் குருநகர் சனசமூக நிலையத்தின் முன்பாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி 1995 ஆம் ஆண்டின் 'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் போது படையினரால் சேதமாக்கப்பட்டு தலைகுப்புற வீழ்த்தப்பட்டுக் கிடப்பது வேதனைக்குரியது. ★

ம. ஞா. சீலன்

## இளம் பெண் சூட்டுக்குப் பலி!

# இராணுவக் கப்டனை கைதுசெய்ய உத்தரவு

மட்டக்களப்பு, ஜூன் 9

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் முறக்கொட்டாஞ்சேனையில் இளம்பெண் ஒருவர் சூட்டுக்கு பலியான சம்பவம் தொடர்பாக மாவடிவேம்பு இராணுவமுகாம் பொறுப்பதிகாரியை கைது செய்யுமாறு மட்டக்களப்பு மேலதிக நீதிவான் கே. தட்சணாமூர்த்தி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் மேற்கொண்ட சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த கந்தசாமி விக்கினேஸ்வரி என்பவரின் மரணம் தொடர்பாக விசாரணை நடத்திய சமயம் நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முகாம் பொறுப்பதிகாரி புதிய ரக துப்பாக்கி ஒன்றை பரீட்சித்துப் பார்த்தபோது தற்செயலாக முகாம் அருகில் உள்ள வீட்டில் இருந்த யுவதி மீது சூடு பட்டதாக இராணுவச் சிப்பாய் ஒருவர் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இந்த மரணம் கொலை எனத் தீர்ப்பளித்த நீதிவான் முகாம் பொறுப்பதிகாரியான கப்டன் எஸ் செலாட்டை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார்.

இவர் தற்சமயம் தலைமறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3 21)

## நாளை

வைகாசி 28

வெள்ளிக்கிழமை

திதி: துவாதசி

பிற்பகல் 8 53 வரை

நட்சத்திரம்: பரணி

முன் இரவு 8.20 வரை

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 5.52-7 22

ராகுகாலம் 10 22-.1152

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரம்)

## உதய வாக்கு

சான்றோர்க்கு உரிய ஆற்றல்கள் இரண்டு; ஒன்று சகிப்புத் தன்மை மற்றது பொறுமை.

— ஸ்வீடன்

## கிராமிய வங்கி

நெடுந்தீவு, ஜூன் 10

அனலைதீவு பலநோக்கு சங்கம் இம் மாத நடுப்பகுதியில் கூட்டுறவு கிராமிய வங்கியைத் ஆரம்பித்து வைக்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்சமயம் இடம்பெற்று வருவதாக சங்கத்தின் பொது முகாமையாளர் ஆர். பாஸ்கரன் தெரிவித்தார்

(ஐ-111)



## சாயி சிந்தனை

படுக்கையறையில் உறங்க உதவி செய்ய படுக்கை, தலையணை மேலே மின்விசிறி, காற்றுக் குளிர்பதனம் (Air Conditioning) இவற்றையெல்லாம் வைத்திருக்கிறாய், உம்மால் தூங்க முடியவில்லையென்றால் இவையிருந்து என்ன பயன்? இவை அனைத்தும் பயனற்றுப் போகின்றன. மனம், புத்தி, சித்தம் (நினைவுப் பதிவுகளின் நூலம்) இவற்றின் உதவி கொண்டு அமைதிபெற இயலவில்லையென்றால், அவை இருந்து நமக்கென்ன பயன்? இறைவன் இவற்றை நமக்கேன் அளித்தார்? நாம் விடுதலை (முக்தி) பெறவும், அமைதி பெறவும் இறைவன் இவற்றை நமக்களித்தார்

நம்மை அறிவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும் வேறு யாரோ நம்மைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறோம். மனமும் புத்தியுமே ஒழுங்குபடுத்துகின்றன என்று நினைக்கிறோம் கட்டுப்பாடு, உன் இதயத்திலுள்ளது. வெளியே நோக்கும் போது மனிதனுக்கு அமைதி (Pieace இராது; வெளியே Pleces துண்டுகள் தான் உள்ளன (வெளியுலகம் சிதறி, பல துண்டுகளாக உள்ளது) தூலவளவில் மனிதன் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளான், ஆனால் நீதிநெறி, மதம், ஆன்மீகம் இவையெல்லாம் தாழ்ந்து வருகின்றன.

(ஆதாரம்: சாயி அருளமுதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணை விட்டு ஓடும் டாக்டர்கள்
# தொழிலுக்கே மாசு கற்பிக்கிறார்கள்
## விருது வழங்கும் நிகழ்வில் ஆதீன முதல்வர்

நெல்லியடி, ஜூன் 10

நமது நாட்டில் டாக்டர் பட்டம் பெற்ற பலர் தமிழினத்துக்கும் தமது உறவுகளுக்கும் உதவி புரியாது எமது மண்ணை விட்டு ஓடுகின்றார்கள் இதனால் பல நோயாளிகள் பெரும் உயிராபத்தை எதிர்நோக்கும் நிலை இங்கு தோன்றுகிறது. இவ்வாறு மக்கள் பற்றில்லாமல் நடந்துகொள்வது அவர்களின் தொழிலுக்கே மாசு கற்பிப்பதாகும்.

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையின் வைகாசிப் பெருவிழாவில், பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளைக்கு ''ஞானபண்டிதசேவாசுரபி'' விருது வழங்கும் வைபவத்தின் போது, ஆசியுரை கூறிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விழா கடந்த மாத இறுதியில் பேரவைத் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெற்றது.

விழாவின் ஆரம்பத்தில், தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் விசேட பூசையில் கலந்து கொண்ட பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி அங்கிருந்து ஊர்வலமாக, சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

அங்கு பருத்தித்துறை சத்ய சாயி பாபா நிலையத்தினரின் பஜனையுடன் விழா ஆரம்பமாகியது.

தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு வளம், சமய பண்பாடு போன்றவைகளுக்கும் பெரியார்களை ஆசீர்வதிப்பதற்கும் ஒரு சிறப்பான நாள் வைகாசிப் பெருவிழாவாகும்.

நாம் பலவித நிலையில் சிந்திக்க வேண்டும். தன்னை துயரத்துக்கு ஆளாக்கும் நேரம் இது. வடபகுதியில் எல்லோர் மனதிலும் தென்படும் உருவமாக டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை விளங்குகின்றார்.

சமயசமூக ரீதியில் நோய்க்கு மருந்து கொடுப்பதிலும் பார்க்க, நோயாளிகளுடன் உரையாடுவதன் மூலம் அவரது நோய் குணமடையும். அந்த நற்பணிபுக்குரியவர்களில் ஒருவரே வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை யாவார்.

புதையுண்டுள்ள எலும்புக் கூடுகளை ஆராயும் நிலையில் சில டாக்டர்கள் எமது மண்ணில் இருக்கின்ற போதிலும், டாக்டர் பட்டம் பெற்ற பலர், இங்கிருந்து ஓட்டம் பிடிப்பது ஒருபுறம் மிகவும் வேதனைக்குரியதாகும். வைத்தியர்களை நோயாளர்கள் தெய்வமாகக் கருதுகிறார்கள். அவ்வாறிருக்க அவர்கள் இம் மண்ணை விட்டு ஓடுவது நோயாளருக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகும். சமூகத்தில் பெரியவர்களாக உயர்ந்தவர்கள் தாம் அதனை அடைய எவ்வாறு உழைத்தார்கள் என்பதனை இளைஞர்களுக்குக் கூற வேண்டும் அதனை இன்றைய இளைஞர் சமுதாயம் கிரகித்துதாமும் அவ்வாறுஉயர முன்வரவேண்டும் உழைக்க வேண்டும்

பதினாறு கலைகள் கூடியிருக்கின்ற வைகாசிப் பெருநாளில், வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளைக்கு வழங்கிய இவ் விருது மூலம் அவரது வைத்திய சேவையும் சமயப் பற்றும் மேன்மேலும் சிறப்படையும் — என்றார்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட, வெள்ளியினாலான 'ஞானபண்டித சேவா சுரபி' என்ற கௌரவ விருதினை வல்வை வாலாம்பிகை வைத்தீஸ்வரர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள், டாக்டர் கதிரவேற்பிள்ளையிடம் கையளித்தார்.

இவ்விழாவில், செஞ்சொற் செல்வன்' ஆறு. திருமுருகன் ஆசிரியர், பண்டிதர் கை. நமசிவாயக் குருக்கள், எம். சண்முகம் பருத்தித்துறை முன்னாள் பிரதேச செயலர் கே. முருகேசபிள்ளை, செ. செல்வரட்ணம், எம். சிவக்கொழுந்து உட்பட இன்னும் பலர் ஆசியுரை வழங்கினார்கள். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் அறங்காவலர் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட வாழ்த்து மடலும் இங்கு வாசிக்கப்பட்டது.

இறுதியாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை பதிலுரைவழங்கினார். (ஐ-109)

## மிதி வெடிகளால்
# இருபாலை வயல்களில் கால்நடைகள் காலிழப்பு

இருபாலைப் பகுதியில் உள்ள வயல் வெளிகளில் கால் நடைகள் மிதிவெடிகளில் அகப்பட்டு இறக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இருபாலை கிழக்குப் பகுதி வயல்வெளி ஊடாக முன்னர் பெரிய மண் அணை அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது அகற்றப்பட்டிருந்தது. எனினும் அப் பகுதியில் மிதி வெடிகள் அகற்றப்படாமையினால் அப்பகுதிக்கு மக்கள் செல்வது முற்றாகத் தவிர்க்கப்பட்டு வந்தது. ஆனால் கால்நடைகள் இப்பகுதிக்குள் சென்று மேய்வதால் பல மாடுகளும் ஆடுகளும் மிதி வெடிகளில் சிக்கி இறந்தும் கால்களை இழந்தும் உள்ளன.

கடந்த வாரம் ஆடு ஒன்று வயல்வெளிக் கந்தசுவாமி கோவில் முன்பாக உள்ள வயலில் மிதிவெடியில் சிக்குண்டு உடல் சிதறிப் பலியாகியுள்ளது.

இதனால் கால்நடை வளர்ப்போர் கவலையடைந்துள்ளனர். (ஐ-180)

## 1997 இல் மன்னாரில் இடம்பெற்ற
# இளைஞரின் கொலை தொடர்பாக படையினரை ஆஜராக உத்தரவு

வவுனியா, ஜூன் 10

மன்னார் சவுத்பார் இராணுவத்தினரால் 1997 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் பின்னர் அடித்துக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சவுத்பார் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் நிஸங்க உட்பட சம்பந்தப்பட்ட அனைவரையும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு மன்னார் மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

கந்தர்மடம் பழம் வீதியைச் சேர்ந்த திருநீலகண்டன் ஹரிகரன் என்ற இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான மீள் விசாரணையின் போதே நீதிவான் மேற்படி உத்தரவை வழங்கினார்.

கசிப்பு வழக்குத் தொடர்பாக நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட சவுத்பார் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் எஸ். யேசுரட்ணம் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இந்த மீள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

எஸ். யேசுரட்ணம் தனது சாட்சியத்தில் கடந்த 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி சவுத்பார் இராணுவத்தினர் இளைஞர் ஒருவரை கைதுசெய்து அடித்துக் கொலை செய்ததாகவும்—

இதுதொடர்பாகத்தான் அரசாங்க அதிபர் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியோருக்குத் தெரிவித்ததாகவும்—

இதனால் ஆத்திரமடைந்த படையினர் தன் மீது ஆத்திரமடைந்து தனக்கு எதிராக கசிப்பு வழக்கு தாக்கல் செய்ததாகவும்—

தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து உடனடியாகவே குறிப்பிட்ட வழக்கின் மரணப்பதிவேடுகளை பார்வையிட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் அந்த வழக்கில் மரணத்துக்கான காரணம் அறியப்படவில்லை என்றும்—

பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும்— எனவே இந்த சாட்சி முக்கியத்துவம் பெறுவதாகத் தெரிவித்து புலன் விசாரணைகளை நடத்துமாறும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மீள் விசாரணைகளின் போது கிந்துட்டவிதானலாகே ஹில்பட் சில்வா ஐயம்பெருமாள் விஜயகுமார் ஆகியோரும் சாட்சியமளித்திருந்தனர்.

இவர்கள் மூவரும் தமது சாட்சியத்தில் லெப்டினன்ட் நிஸங்கதலைமையிலானஇராணுவத்தினர் பிரஸ்தபாஇளைஞரைக் கைதுசெய்து பொது மக்கள் முன்னிலையில் வைத்துத் தாக்கியதாகவும். தாக்குதலுக்குள்ளாகி நடக்க முடியாதிருந்த ஹரிகரனை ஒரு மணித்தியாலத்தின் பின்னர் இராணுவத்தினர் தம்முடன் அழைத்துச் சென்றதாகவும்—

அதன் பின்னர் பல தடவைகள் முகாமில் இருந்து ஒருவர் அலறும் சத்தம் கேட்டதாகவும்—

அடுத்த நாள் ஹரிகரன் இறந்து விட்டதாகத் தெரிந்தது எனவும்—

இராணுவம் அடித்ததனாலேயே அவர் இறந்ததாகவும்—

தெரிவித்துள்ளனர். (ஐ-160)

# பல்கலைக்கழகத்தில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களது வெளியீடுகள் மற்றும் பல்கலைக்கழக வெளியீடுகளான நூல்கள், சஞ்சிகைகள், சிந்தனை இதழ்கள் ஆகியவற்றின் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 19 ஆம், 20 ஆம், 21 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் காலை 9-00 மணிமுதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை —

யாழ். பல்கலைக்கழகத்தின் வெளியீடுகள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களது தனிப்பட்ட வெளியீடுகள் ஆகியவற்றை விற்பனை செய்யும் நிலையம் ஒன்று இம்மாதம் முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தில் நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வெளியீடுகள் ஆகியவற்றை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## வாசகர் திருமுகம்

### மாகாண ஆளுநர் கவனத்துக்கு

1996 சித்திரை மாதத்தின் பின்பு மீளக் குடியமர்ந்த மக்கள் பலதரப்பட்ட நிலைகளிலும் பின்தங்கியுள்ளதனை மிகவும் வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அரசாங்கம் மக்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது.

(1) வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்கள்
(2) வறுமைக்கோட்டுக்கு மேல் உள்ள மக்கள்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்கள் என அரசால் அடையாளம் காணப்பட்டோர் மேன்மேலும் வறியவர்களாகவும் (Poorest of the Poor) வறுமைக் கோட்டுக்குமேல் உள்ள மக்கள் என அடையாளம் காணப்பட்டோர் பிச்சா பாத்திரம் ஏந்துகின்ற நிலையிலும் உள்ளனர்.

இதற்கான அடிமட்டக் காரணங்களைப் பின்வருமாறு வகுக்கலாம்.

(i) அரசால் வழங்கப்படும் உதவிகள் மக்களைச் சென்றடையாமை.
(ii) அதிகாரப் பதவியில் உள்ளோரால் செய்யப்படும் அதிகார துஷ்பிரயோகங்கள்.
(iii) மக்களின் அடிப்படைத் தேவைகள் இனங்காணப் படாமை.
(iv) தரகர்கள் / முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கம்.
(v) திட்டமற்ற செயற்பாடுகளும், பிழையான அணுகுமுறைகளும்.

1996 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மீளக்குடியேறிய மக்களுக்கு மீளக் குடியமர்வுப் பணம் 5000 ரூபா இன்னும் வழங்கி முடியவில்லை. முத்திரையின் மேல் ஒப்பம் வைத்தால் பணம் பெற்றுக்கொண்டதற்குச் சமனாகும். ஆனால் முத்திரையில் ஒப்பம் வைத்து பத்து மாதங்களாகியும் ஏராளமானோருக்கு இன்னும் வங்கிக்குப் பணம் அனுப்பப்படவில்லை. பிரதேச செயலகங்களில் கேட்டால் கொழும்பில் இருந்து பணம் வரவில்லை எனக் கூறுகின்றனர், இதனால் மக்கள் மன உளைச்சலுக்கும், வேதனைகளுக்கும் ஆளாவதோடு அரசாங்கத்தையும் பல கோணங்களில் விமர்சிப்பதைக் காணமுடிகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டு அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட சிமெந்து, கட்டடப் பொருள்களின் விநியோகம் சீரற்ற முறையில் நீதியற்ற முறையில் வழங்கப்பட்டமை அரச மட்டங்களுக்கு நன்கு தெரியும். ஆனால் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பிரதேச செயலாளர்களுக்கு மக்கள் முறைப்பாடு செய்ததுதான் மிச்சம்.

முதலாளி வர்க்கம், தரகர்களின் ஆதிக்கங்களைக் கட்டுப்படுத்தி நியாய விலையில் பொருள்கள் மக்களைச் சென்றடைய அரச நிர்வாகம் தவறிவிட்டது.

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் மக்கள் போடும் கூக்குரல்கள் தான் ஒலிக்கின்றன. மக்கள் நிறைவை நோக்கிச்செல்லவில்லை. பாதாளத்தை நோக்கிச் செல்கின்ற நிலைப்பாட்டையே யாழ்ப்பாணத்தில் காணமுடிகின்றது.

எனவே மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவான முறையில் பூர்த்தி செய்யுமா? வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநரைப் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

சோ. புவனேந்திரன்.

ஆடியபாதம் வீதி,
நல்லூர்.

### 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்

21 ஆம் நூற்றாண்டு 1—1—2000 இல் ஆரம்பமாகும் எனத் தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. இலங்கை வானொலி அதன் செய்திகளில் கடந்த வெசாக் வைபவம் இருபதாம் நூற்றாண்டின் கடைசி வைபவம் என ஒலி பரப்பியது.

20 X 100 = 2000 என வருவதால் 20 ஆம் நூற்றாண்டு 31—12—2000 இல் முடிவடையும் என்பதே சரியான கூற்றாகும். 01—01—2001 இல் தான் 21 ஆம் நூற்றாண்டு ஆரம்பமாகும் பிரபல விஞ்ஞானி, ஆதர் கிளாக் என்பவர் கூட இதனையே சரி என்று கூறி விளக்கியுள்ளார்.

20 ஆம் நூற்றாண்டு 01—01—1901 இல் ஆரம்பமாகியது என்பதும் கவனிக்கத்தக்கது.

வை. மகாதேவன்

கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக திருத்த சட்ட மூலத்தின் சில பிரிவுகள் அரசமைப்புக்கு முரண்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜூன் 10

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்பின் சில பிரிவுகளுக்கு முரணானதாக அமைவதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புத் தொடர்பான அறிவிப்பைச் சபாநாயகர் கே.பி. இரத்நாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் வாசித்தார்.

பல்கலைக்கழக திருத்தச் சட்டமூலத்தின் பிரிவுகளான 3, 62, 4, 8, 9, 12, 14 ஆகியன அரசமைப்பின் பிரிவுகளான 10, 12(1), 84. 83 என்பவற்றுடன் ஒப்பிடுகையில் முரண்படுவதாக அமைந்துள்ளது எனவும் —

தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அரசமைப்பின் பிரிவு 84(2) க்கு அமைய நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் —

உயர்நீதிமன்றம் அறிவித்து விட்டதாகச் சபாநாயகர் தனது அறிவிப்பில் தெரிவித்தார். (இ-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஜூன் 10

வட பகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

செம்மணிப் புதைகுழிகள் தோண்டும்பணி எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் ஆரம்பிக்கப்பட இருப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட உள்ளது. (இ-6)

## வீதிகள் மோசமான நிலையில்

பொதுமக்கள் அதிகளவில் பயணம் செய்யும் பிறவுண் வீதி, கலட்டிச் சந்திப் பகுதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பயணம் செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை —

கச்சேரி - நல்லூர் வீதியும் குண்டும் குழியுமாகக் காணப்படுவதால், இங்கும் பயணிகள் பெரிதும் இடர்ப்பாடுகளைச் சந்திக்கவேண்யுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

## கல்விசார் படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் நூலகமும் இணைந்து யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூட்டத்தில் சனிக்கிழமை தோறும் நடத்திவரும் கல்விசார் வீடியோப் படக்காட்சித் தொடரில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணி முதல் 'பென்ஹர்' என்னும் தலைப்பில் வீடியோப் படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது

இந்தக் காட்சித் தொடரைக் காண ஆர்வமுள்ள எவரும் வருகைதர முடியும் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (உ)


## சுனில் ஆட்ஸ்

- Photo Chorome
- Acme
- Photo Friends
- Color Chorome

நீங்கள் விரும்பிய COLOR LAB இல் கழுவிப் பெற்றுக் கொள்ளலாம். துரிதசேவை

14—06—99 அன்று படச் சுருள்கள் (COLOMBO) கொழும்புக்கு அனுப்பப்படும்.

சுனில் ஆட்ஸ்
272, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(சி/7837)


# காங்கேசனிலிருந்து 9 பேர் அ,புரம் நீதிமன்றத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் 9பேர் கடந்த 5 ஆம் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ ஸ்ரீ ராமச்சந்திரன் கெங்காதரன், [வயது 25] வல்வெட்டித்துறை,
★ கிட்ணன் கிருஷ்ணராஜா வரணி, மாசேரி,
★ நாகேந்திரன் ஜெகதீஸ் வரணி வரணி, மாசேரி,
★ செல்வரட்ணம் ஜெகன் மட்டுவில் வடக்கு
★ அன்னலிங்கம் சுசீகரன் கந்தர்மடம்,
★ பெனடிக்ற் அன்ரனி கிறிஸ்ரியன் அரியாலை,
★ தர்மலிங்கம் புஸ்பதீபன் யாழ்ப்பாணம்,
★ நாராயணன் உதயச்சந்திரன் இளவாலை,
★ நடராஜா சங்கரநாதன் நுணாவில்

இவர்களுக்கான அடுத்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி நடைபெறும் என்றும் நடராஜா சங்கரநாதனுக்கு அடுத்த வழக்குக்கான தவணை வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி-5)

## சித்தமருத்துவ சஞ்சிகை வெளியீடு

கோப்பாய். ஜூன் 10

யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ மாணவர் மன்றத்தினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற 'சித்த மருத்துவம்' எனும் சஞ்சிகை எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

வைத்திய கலாநிதி திருமதி ஞா. பவானி தலைமையில் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் ஆசியுரையை கலாநிதிசெல்விதங்கம்மா அப்பாக்குட்டியும் சிறப்புரையை வைத்திய கலாநிதி திருமதி மி. ஸ்ரீகாந்தனும். வெளியீட்டுரையை பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும் ஆய்வுரையை வைத்திய கலாநிதி சு.நச்சினார்க்கினியன், வைத்திய கலாநிதி ஜ. ஜெயநாம கணேசனும் வழங்குவார்.

## தமிழ்மொழித் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

கோண்டாவில் டரஞ்சோதி வித்தியாலய தமிழ்மொழித் தினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ். சண்முககுமார் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக நல்லூர் உதவிப் பிரதேச செயலாளர் கி. வேல்முருகோன் பிள்ளையும் சிறப்பு விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீ தயாளனும் கௌரவவிருந்தினராக ஆசிரியர் தி. சி. கதிரவேலுவும் கலந்து கொள்வர்.

தமிழ்த் தினப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். [இ-6]

# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகளில் 1 ஆம் வேலைக்கு இக்ராட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும், ஏனைய வேலைகளுக்கு அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 30 - 06 - 1999 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இக் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் அன்றைய தினமே நண்பகல் 12-00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு. மூலப்பிரதியை "தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியைப் "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும எதிர்வரும் 30 - 06 - 1999 ஆம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| 01. அச்சுவேலிச் சந்தை மேல்மாடித் தொடர் வேலை 2 ஆம் கட்டம் | 10,000-00 | 1,500-00 |
| 02. உரும்பிராய் சந்தைக் கடைகள் 01, 02, 03 திருத்தி அமைத்தல் | 3,000-00 | 350-00 |
| 03. உரும்பிராய் சந்தை 04, 05 ஆம் கடைகளை இறைச்சிக் கடையாக மாற்றி அமைத்தல் | 2,500-00 | 300-00 |
| 04. ஆவரங்கால் சந்தைக் கடை இல. 1 திருத்தம் செய்தல் | 2,000-00 | 300-00 |
| 05. நீர்வேலி உப அலுவலக நூல் நிலைய வாசிப்பு மண்டப கூரைத் திருத்தம் | 500-00 | 100-00 |

மேற்படி வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 29 - 06 - 1999 ஆம் திகதி பி. ப. 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பூ. குணசிங்கம்
தவிசாளர்

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
08 - 06 - 1999

(சி/7838)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா வன்னியசிங்கம்

(முன்னாள் காவலாளர், அரச முதியோர் இல்லம்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா வன்னியசிங்கம் 09-06-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் இராசலிங்கம் (கனடா), விஜயசிங்கம், விஜயமலர் (கனடா), இராஜசிங்கம் (கனடா), வசந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும் கனடாவில் வசிப்பவர்களான தாமரைவதனி, சொர்ணலதா, சாந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சண்முகம், சூரியகுமாரி, சந்திரா, சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும் திரு. திருமதி பஞ்சலிங்கம், திரு. திருமதி பாலசிங்கம் (கனடா), லீலாவதி (கனடா), கிளி (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் கனடாவில் வசிப்பவர்களான கபிலன், ஜெனனி, ஜதீஷன். பாரதி, ஆரணி ஆகியோரின் பேரனும் சத்தியசீலன் இராசம்மாவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-06-99) வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகசெம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. அரசபிள்ளை
(மைத்துனர்)

ஞா. பா. ச. வீதி,
கல்வியங்காடு.

(66517)

## பொன்னையா திருப்பதிப்பிள்ளை

[கைதடி]

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திருப்பதிப்பிள்ளை 09-06—1999 இல் காலமானார்.

அன்னார் அமரர் வைரமுத்து பொன்னையாவின் புதல்வனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி தவச்செல்வியின் [சுவிஸ்] அன்புத் தந்தையும் சர்வானந்தனின் [சுவிஸ்] அன்பு மாமனாரும் தினோதிமன், சனா ஆகியோரின் அன்புப் பேரனும் பொ. ஆசைப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மட்டுவில் திருமதி ப. சறோஜினிதேவியின் இல்லத்தில் [10—06—1999] இன்று வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில்மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்;
கா. பரமானந்தன்

மட்டுவில்,
வடக்கு.

[66515]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காய கொள்வனவில் முறைகேடு: விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஊடாக வெங்காயத்தைக் கொள்வனவு செய்ததில் முறைகேடு இடம்பெற்றதாகத் தெரிவித்து. வெங்காயத்தை லொறிகளில் ஏற்றவிடாது விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் அளவெட்டியில் நேற்று இடம்பெற்றது.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

பிரஸ்தாப சமாசம் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ஓர் அந்தர் வெங்காயத்தை 600 ரூபா வீதம் கொள்வனவு செய்து வருகிறது.

ஆனால் அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தனக்கு வேண்டிய சில விவசாயிகளிடம் மட்டும் ஓர் அந்தர் வெங்காயத்தை 425 ரூபா வீதம் இரவோடு இரவாக கொள்வனவு செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

தலைமை அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்ட வெங்காயத்தை லொறிகளில் ஏற்ற முற்பட்ட சமயம் விடயமறிந்த விவசாயிகள் சங்கத் தலைமை அலுவலகம் முன் கூடி வெங்காயத்தை லொறிகளில் ஏற்ற விடாமலும், வாகனங்களை வெளியே போக விடாமலும் தடுத்துப் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அறிந்து தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதிப. திலகநாயகம்போல் அளவெட்டி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆகியோர் அங்கு வந்து விவசாயிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனை அடுத்துச் சகல விவசாயிகளிடம் இருந்தும் ஐந்து அந்தர் வீதம் வெங்காயத்தைக் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.

இதன் பின்னரே விவசாயிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டுச் சென்றனர். [இ-ரி]

## கூட்டணி குறித்து

# முடிவு எடுக்க முடியாத நிலையில் த. மா. கா

புதுடில்லி, ஜூன் 10

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்த அணியுடன் சேர்வது என்பது குறித்து முடிவு செய்ய தமிழ் மாநிலக் காங்கிரஸ் அதன் பொதுக் குழுக் கூட்டத்தை கூட்டவுள்ளது.

எந்த அணியில் சேர்வது என்பதைத் தெரிவு செய்வதில் கட்சி குழப்பநிலையில் உள்ளது என அதன் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி அ. தி. மு. க. காங்கிரஸ் மற்றும் இடது சாரிக் கட்சிகளுடன் சேர முன்வந்துள்ளது.

1996 ஆம் ஆண்டு காங்கிரஸ் அ. தி. மு. க. வுடன் கூட்டுச் சேர்ந்ததை எதிர்த்து மூப்பனார் தலைமையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் அமைக்கப்பட்டது தெரிந்ததே. (ஐ-க)

# சர்தாஜ் அஸீஸ் சனியன்று டில்லி வருவார்

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சர்தாஜ் அஸீஸ் எதிர்வரும் சனிக்கிழமை புதுடில்லிக்கு விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை அஸீஸ் பேச்சு நடத்த புதுடில்லி வரலாம் என இந்தியா தெரிவித்ததை அடுத்து அவர் பிரதமர் நவாஸ் ஷெரிப்புடன் ஆலோசனை நடத்தி புதுடில்லி செல்வது எனத் தீர்மானித்துள்ளதாக இஸ்லாமாபாத் தகவல்கள் தெரிவித்தன.

கார்கில் பகுதியில் தற்பொழுது நிலவும் பதற்றத்தைத் தணிப்பதே தமது பயணத்தின் பிரதான நோக்கம் என்று அவர் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் தெரிவித்தார்.

இதேவேளை —

கார்கில் பகுதியில் இருந்து ஆயுதம் தாங்கிய ஊடுருவல்காரர்களை விலக்கிக் கொள்வதற்காக பாகிஸ்தான் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பது குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த முடியும் என இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் கூறியிருந்தமை தெரிந்ததே. (க)

# துப்பாக்கிச் சூட்டில் வேட்டைக்காரர் இருவர் பலி!

மட்டக்களப்பு, ஜூன் 10

பொலன்னறுவை மாவட்டம், வெலிகந்த ஆரியவெவ வனப் பிரதேசத்தில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இரு வேட்டைக்காரர்கள் பலியாகினர்.

தடை செய்யப்பட்ட இந்த வனப்பிரதேசத்தில் நேற்று சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் இவர்கள் இருவரும் உயிரிழந்தனர் என்று வெலிகந்த பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-6-21)

# ஆஸி அணி வெற்றி

லண்டன், ஜூன் 10

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணி 44 ஓட்டங்களால் சிம்பாப்வே அணியை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்இழப்புக்கு 303 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 259 ஓட்டங்களைப் பெற்றது. (இ.6)

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்)

சேனையில் படையினரின் துப்பாக்கிச் சூடு காரணமாக உயிரிழந்த கந்தசாமி விக்கினேஸ்வரியின் ( வயது 22 ) மரணம் தொடர்பாகவே இராணுவக் கப்டன் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய மேலதிக நீதிவான் கே. தட்சணாமூர்த்தி இந்த மரணம் ஒரு கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து முகாம் பொறுப்பதிகாரியைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றுச் சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவர எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இராணுவ பொலீஸாரின் காவலில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-6 21)

## நாளைய..

[முதலாம் பக்கத் தொடர்]

கொள்ளுப்பிட்டி ஆனந்தக் குமாரசுவாமி மாவத்தையில், நாளை காலை 10-00மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பேரணி நண்பகல் அளவில் புறக்கோட்டை ஐந்துலாம்படிச் சந்தியை வந்தடையும்.

இந்தப் பேரணியில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள், சமாதானத்துக்காகக் குரல் கொடுப்பவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு கலந்து கொள்ள வேண்டுமென இ தொ. காவும் மற்றும் பல கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

லங்காசமசமாஜக் கட்சிமற்றும் நவசமசமாஜக் கட்சியும் மேற்படி பேரணிக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ. ஆனந்தசங்கரி மேற்படி பேரணி குறித்து வெளியிட்ட அறிக்கையில் "இனவாதம் பேசி சீரழிந்து போன நாடுகளில் முன்னணி வகிப்பது இலங்கை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை, என்றும்—

இனவாதிகளால் நாட்டுக்கு ஏற்பட்ட பொருள் இழப்புக்களும், உயிரிழப்புக்களும் சொல்லில் அடங்காது என்றும்— தெரிவித்துள்ளார்.

சிங்கள வீரவிதான இயக்கத்தின் நடவடிக்கைகளை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், தமது கட்சித் தொண்டர்களையும் ஆதரவாளர்களைவும் நாளை நடைபெறும் பேரணியில் கலந்துகொள்ளுமாறு தாம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேல் மாகாணசபையின் உறுப்பினர் மனோகணேசன் விடுத்துள்ள அறிக்கையில் கொழும்பில் எமக்கு முன்னால இருக்கக் கூடிய ஒரே வழி நாம் ஒன்றுபட்டு எமது எதிர்ப்பைதெரிவிப்பதுதான். பேரினவாத கூச்சல்களையும் நடவடிக்கைகளையும் கண்டு கைகட்டி, வாய்மூடி மௌனிகளாக இனிமேலும் நாம் இருக்கமுடியாது. இன்றில்லாவிட்டால் என்றுமே எம்மால் அணிதிரள முடியாது என்பதைத் தமிழ் பேசும் மக்கள் மனதில் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் நாளைய ஆர்ப்பாட்டப் பேரணியை ஒட்டி தமது வியாபார நிலையங்களை நாளை காலையில் இருந்து நண்பகல் வரை மூடி கடையடைப்புச் செய்வர் எனவும் —

தமிழ் மாணவர்களும் ஆசிரியர்களும் நாளைய தினம் பாடசாலைகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் செல்லாது வகுப்புகளைப் பகிஷ்கரிப்பர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## வவுனியா...

(முதலாம் பக்கம் தொடர்)

வில் புளொட் — ரெலோ அமைப்புக்களிடையே முறுகல் நிலை அதிகரித்ததை அடுத்து இரு அமைப்பினரிடமிருந்தும் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டது தெரிந்ததே.

இதன் போதும் புளொட் அமைப்பிடமிருந்து 13 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

(இ-6-21-164)


## புதிய பிரிவு

ஆரம்பம்:
16-06 1999

OXFORD
ENGLISH ACADEMY

ஆலடிப் பிள்ளையார் வீதி,
சுப்பர்மடம்,
பருத்தித்துறை.

By:
B. JOTHY
[ B Com (Hons) ]

* அனுமதியை முன் கூட்டியே பெறவும்.

[66443]


## வீரவிதான...

(முதலாம் பக்கத் தொடர்)

டின் இன, மத குரோதங்களை வளர்ப்பதாக அமைகின்றன. இவற்றை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

இத்தகைய குற்றங்களுக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு 5 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க முடியும்.

சிங்கள வீரவிதானஇயக்கம் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸ்மா அதிபருக்கு தாங்கள் பணிப்புரை விடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

## புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்)

தாகக் கூறப்படும் சம்பவம் ஒன்றை ஆட்சேபித்து புனர்வாழ்வுப் பகுதி உத்தியோகத்தர்கள் இன்று தமது பகுதியை மூடி அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபட உள்ளனர்.

புனர்வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளரை வர்த்தகர் ஒருவர் தரக் குறைவாக ஏசியதாகவும் இதற்கு ஆட்சேபம் தெரிவித்தே புனர்வாழ்வுப் பகுதி உத்தியோகத்தர்கள் இன்று தமது பகுதியை மூடி அடையாள எதிர்ப்புத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் யாழ். அரசாங்க அதிபருக்கு புனர்வாழ்வுப் பகுதி உத்தியோகத்தர்களால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் புனர்வாழ்வுப் பகுதியைச் சேர்ந்த கோண்டாவில் களஞ்சிய உத்தியோகத்தர்களும் தொழிலாளர்களும் —

பருத்தித்துறை துறைமுக உத்தியோகத்தர்களும்தொழிலாளர்களும் இன்றைய அடையாள பகிஷ்கரிப்பில் கலந்து கொள்ளப்போவதாக அறிவித்துள்ளனர் என்று யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-86)

# கைதிகளுக்கு புத்தகம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்குத்தேவையான தமிழ்க் கதைப்புத்தகங்களின் ஒரு தொகுதியை நேற்றையதினம் வழங்கியது.

## காங்கேசன்...

[முதலாம் பக்கத் தொடர்]

உமா, முடியப்பு விமலச்சந்திரன், தார்சீசியஸ் பீற்றர் பிறைனர், குணரட்ணம் கனிராஜ், சண்முகம் ரேணுகரன், ராவுத்தர் செல்வம் மணிக்காயர், அருமைத்துரை நாகதீபன், ரட்ணசிங்கம் லெபானியஸ், பிரான்சிஸ் செபஸ்தியாம்பிள்ளை, துரைசாமிரதீஸ், நடராஜா ஆனந்தராஜா, அப்துல் ஜபார் கணேஸ், அருமைத்துரை தவச்செல்வன், சிறில் செல்ரன்நிரோஸ், யேசுராசா குணசீலன், அருள்தாசன் கிருஸ்தோப்மன் கஜேன், மில்டன் சந்திரசேகர், குணரட்ணம் குணசீலன். (இ-ரி-5)

## ராஜபக்ஷ...

(முதலாம் பக்கத் தொடர்)

இது தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் ஓ.எஸ்.எம். செனிவிரட்ண கோட்டை பொலீஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்குக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் ராஜபக்ஷவின் குடும்பததினருக்குக்கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருப்பதனால் அவர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு வழங்குமாறு கோரப்பட்டுளளது.

இதேவேளை—

ராஜபக்ஷவின் குடும்பத்தினருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுத்து சிங்கள மொழியில் அனுப்பப்பட்ட கடிதங்களின் பிரதிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் அவர்களது வீட்டுக்குச் சென்று பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

"ராஜபக்ஷ செம்மணிக்குச் சென்று புதை குழிகளை அடையாளம் காட்டும் செயலை நிறுத்த வேண்டும் அல்லது உன்னையும் பிள்ளைகளையும் கொலை செய்வோம்" என்ற சாரப்பட ராஜபக்ஷவின் மனைவிக்குக் கொலைப் பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டது தெரிந்ததே. (இ-6)


நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையம்
நடத்தும்

## மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

நாள்: 13-06-1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 2 மணி [பழைய நேரம்]
இடம்: ஆவரங்கால் சவாரித்திடல்

- நிர்வாகம்

நவக்கிரி

(65508)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org